உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-௫௰.] விஜய௵—மாசி௴ [பகுதி-௪.

Vol. 50. February—March 1954. No. 4.

சிந்தாமணி விளக்கம்: சீவகன்பெயர்

திரு. நா. அப்பணையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை.

(70-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி அச்சணந்தி ஆசிரியரிடம் சீவகன் விச்சைகள் பயின்ற வரலாறு விளக்கம்பெறல் உரித்து. தந்தையுந் தாயும் தக்க பிராயத்தில் மைந்தனைக் கற்பிக்கத் தொடங்கினர். அப்பொழுது வெற்றிமடந்தையும் புகழ்மடந்தையும், அதற்குமுன் அவனைப் பெறாது நின்ற வருத்தம் நீங்கி மகிழ்ந்தனர். திருமகள் அவனைப் பெற்றும் சிறிதுகாலம் பிரிய நேர்ந்தமைக்குப் புலம்பி வருந்தினள். இவ்வாறு நாமகள் கலத்தை யெல்லாம் நயந்து உடன்பருகினான் சீவகன் என்று சிந்தாமணிச் செய்யுள் சிறப்பிக்கின்றது.

இங்கு வெற்றிமடந்தையும் புகழ்மடந்தையும் மகிழ்ந்தனர் என்றது, சீவகன் கற்று வருந்தி வெற்றியும் புகழும் விளைபயனாக இறுதியில் எய்தவேண்டாமல், எளிதாக அடிப்படையிலே அவை தாமே அவனை மேவுதற்கு விரும்பியிருந்தமை விளக்கி நின்றது. இவை இரண்டு பயன்களும், தானும் சீவித்துப் பிறரையும்சீவிக்கச் செய்யும் அவனுடைய உயரிய வாழ்க்கையில் உறுதுணையாய் உப

சாரப்படுவன. ஆதலின் அவ் வினைபயன் நோக்க, இக் கல்விகற்ற வரலாறும் சீவகன் பெயர்ப்பொருள் விளக்கச் சிறந்த காரணமாய் அமைந்தது என்னலாம்.

அப்பொழுது திருமகள் புலம்பினள் என்றது, சீவகன் செல்வச் செருக்கின்றிச் சீரிய வழிபாட்டோடு கற்றமை விளக்கி நின்றது. பிற்றைநிலை முனியாது, உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் அவன் கல்விகற்ற அருமை இதனால் உணர்த்தப்பட்டது. இவ்வாறெல்லாம் அவன் வழிபாடாற்றின அருமையாலேயே, அக் கல்வி அவன் வழிப்படுவதாயிற்று என்பதாம். இனி வெற்றி மகளும் புகழ்மகளும் அவனை விரும்பிச்சேர அவன் தான் நாமகளை நயந்து சேர்ந்தானாகையால், அதுகண்டு பூமகள் பொறாமையால் புலம்பினள் என்றாற்போல ஒரு பொருள்நயமும் இங்கே புலன் கொள நின்றது. இவ்வளவு கருத்தினையும் இனிதாக உட்கொண்டு

பூமகள் புலம்பி வைக (367)

எனச் சுருங்கச்சொல்லி விளங்கவைத்த ஆசிரியர் அருங்கவித் திறனை என்னென்று வியப்பது?

இனி நாமகள் நலத்தையெல்லாம் நயந்து உடன்பருகினன் சீவகன் என்றது, விற்கலையும் சொற்கலையும் முதலான வித்தைகள் அனைத்தும், அவன் பருகுவனன்ன ஆர்வத்தோடு கற்றுத் துறைபோகி முற்றவும் அடிப்படுத்தின முதன்மை விளக்கின்றது.

கற்றடிப்படுத்த விஞ்சைக் காமரு காமனன்னான் (1285)

என்ற பதுமையாரிலம்பகப் பாடற்பகுதி இங்கே நினைவுக்குரியது. இதனால் உலகத்து ஏனைமக்கள் கற்பதுபோலன்று சீவகன் கல்வி பயின்றது, என அதன் தனிச்சிறப்பான பண்பு பாராட்டப்பட்டது.

இங்ஙனம் கணிப்பரிய விஞ்சைகள் எல்லாம் அவன் கற்று அடிப்படுத்திய காரணத்தால், கலைத்தெய்வமே அவனுக்கு வசமாயொழு

னின்றுபோலத் தேவருள்ளத்தில் சிந்தனை கிளர்ந்தது. அதனால் இதனை நாமகளிலம்பகம் எனவே பெயர்புனைந்து நன்கு யாத்து அமைத்தனர் அந் நல்லிசைப்புலவர். கலைமகளுக்கும் தலைமகனாயி னன் சீவகன்; அதனால் கணவனுக்கு மனைவியைப்போல, அவனுக் குப் பலவகைக் கலைகளும் பணிவிடை புரியலாயின, என்பது இத னால் தேர்ந்த கருத்து. கலையுலகில் இஃது ஒப்புயர்வற்ற கற்பனைச் சித்திரம். இதன் பொருட்சிறப்பு, இத் தொடர்நிலைச் செய்யுளுக்கு மணநூல் என்று மற்றொரு பெயரும் சூட்டுமாறு வாய்த்த முதற் காரணமாய் மொழியும் தரத்தது. இன்னும்,

தலையாய பேருணர்வில் கலைமகட்குத் தலைவராய்ச்
சிலையாயுந் தனுவேதம் தெவ்வரைப்போல் பணிசெய்ய
(இராமாவதாரம். குலமுறை 23.)

என இராமனும் இளையரும் விற்றொழில் முதலிய விச்சைகள் நிரம் பினமை கூறவந்த கல்வியிற்பெரிய கம்பநாடர் கவிதையிலும் இக் கருத்தமைதி மிகச் சுருக்கமாக நுணுகிச் செறிந்துகாணும் அழகு கற்பவரைக் களியூட்டுவதாகும். இது நிற்க.

கலையின தகலமும் காட்சிக் கின்பமும்
சிலையின தகலமும் வீணைச் செல்வமும்
மலையினின் அகலிய மார்பன் அல்லதிவ்
உலகினில் இலையென ஒருவன் ஆயினான் (411)

என்ற அழகிய சிந்தாமணிச் செய்யுளும் இங்ஙனம் ஆழ்ந்த கருத் துக்கள் அமைந்து விளங்காநின்றது.

சீவகனுக்குப் பதினைந்தாண்டு சென்றபின் இக் கல்விப்பயனாக அவனிடம் சேர்ந்து நிறைந்த குணங்களைச் சித்திரிப்பது இப்பாட்டு. கலையினதகலம்-கல்வி காரணமாகப் பிறக்கும் ஞானம். காட்சிக்கின் பம்—அப்பருவத்தே பிறக்கும் அழகு. சிலையினதகலம்-படைக்கலப் பயிற்சியாற் பிறக்கும் வீரம். வீணைச் செல்வம்—இசை நாடகப்

பயிற்சியாற் பிறக்கும் காமம். இவை நான்கும் அரசர்க்கு இன்றியமையாச் சிறந்த குணங்கள் என்பர். இவை சீவகன் அரசவாழ்க்கைக்கு ஆக்கந்தருவதால், தானும் உய்ந்து பிறரையும் உய்விக்கும் அவன் பெயர்ப்பொருள் விளக்குவதில் நோக்குடையனவே.

இவ்வாறு சிலையினதகலம் சீவகன் வாழ்வுக்கு உறுப்பாய் உதவினதை,

சிலையிடம் பிடித்த ஞான்றே தெவ்வரைச் செகுத்த நம்பி
நிலவுமிழ் குடையின் நீழல் துஞ்சுக வையம் என்பார் (2554)

என மேல் தேவர் விளக்கமாகத் தெளிவித்துள்ளார். இங்கே தெவ்வர் என்றது, பிறவியிலே பகையான கட்டியங்காரனையும் பிள்ளைகள் நூற்றுவரையும் கருதிற்று. நம்பி குடைநிழலில் வையம் துஞ்சுக என்றது இதற்குத் துலக்கு. அவன் கைச்சிலை பிடித்த கன்னிப் போரிலேயே, அவனுக்கு வாய்த்த அரிய பெரிய வென்றியைக் கண்டு, இப் பகைவர் பதைபதைத்து மனத்தகத்தே மடிந்தனர் என்பதாம்.

இனி வீணைச்செல்வம் பயன் தந்தமை, மேல் காந்தருவதத்தையாரிலம்பகத்து விரிவாக விளக்கம் எய்தும்.

விஞ்சைக் கிறைவன் மகள் வீணையில் தோற்ற வாறும் (11)

என இந்நூற் பதிகமும் இதனைப் புனைந்துகூறிற்று. இங்கு விஞ்சைக் கிறைவன் மகள் என்ற அடை, வீணை வித்தகத்தில் அவளை விஞ்சுவார் உலகினில் அரியர் என, அவள் விஞ்சையின் மகிமை உணர்த்துவதில் கருத்துடையது. அவளைச் சீவகன் வென்றவாறும் என அவன் வென்றி கூறாது, அவள் தோற்றவாறும் எனத் தோற்ற செயலுக்கு அவளை வினைமுதலாக்கிக் கூறியது, அவன் அவளை அநாயாசமாக, அரிய முயற்சியின்றி மிகவும் எளிதாக, வென்றி கொண்டமை விளங்க நின்றது. எனவே சீவகன் விஞ்சையின் மகிமை அளவிடல் அரியதென்பதாம்.

இனி மற்றைக் கலையினதகலமும் அவன் வாழ்வினை வளியுறச் செய்தமை, அவன் கதைநிகழ்ச்சி பலவற்றாலும் வெளிப்படை. அவை ஐம்பதமாகிய மந்திரம் பகர்ந்தது, சுண்ணத்தின் நறுமணம் சோதனை புரிந்தது, கடக்களிறடக்கியது, அரவின் விடம் தீர்த்தது, சாமகீதம் பாடியது, எந்திரப் பன்றி எய்து வீழ்த்தியது என்று இன்னோரன்ன பல. அவற்றால் அவன் தானும் வாழ்ந்து பிறரையும் வாழ்வித்த செய்தி அவ்வவ்விடத்தே விவரிக்க அமையும்.

இங்ஙனம் தேவர் தீட்டிய இச் சீவகன் குணசித்திரத்தின் ஆழ்பொருளமைதி, தொட்டனைத் தூறும் மணற்கேணி போலச் சுவையூற்று மேலும் மேலும் சுரவாநின்றது. கலையினதகலம், காட்சிக்கின்பம், சிலையினதகலம், வீணைச்செல்வம் ஆகிய இந் நான்கினுள் ஒவ்வொரு குணத்தாலும், சீவகன்தான் ஒருவனே அல்லது, உலகில் எவரும் தனக்கு உவமையில்லையாகத் தலைமை சான்றனன் என, இங்ஙனம் மேலெழுந்தபடியாகத் தோன்றும் பொருள் ஒன்றுண்டு. ஆயினும் இங்கு வேறாக நச்சினார்க்கினியர் கூறும் பொருள் இதனினும் நயம் மிக்கது. சீவகனல்லாது இக் குணங்கள் அவனின் வேறில்லை என்னும்படி, தான் ஒருவனே ஆயினன்; என்பது அவர் உரை. இதனால், இந்நான்கு குணங்களும் பண்பு, பண்பி என்னும் வேற்றுமையின்றிச் சீவகனுருவில் கலந்து ஒன்றாகின்று விளங்கின என்பதே அவர் கருத்து.

இனி, கலையினதகலம்-நாமகள், காட்சிக்கின்பம்-வீற்றுத்தெய்வம், சிலையினதகலம்-வீரமகள், வீணைச் செல்வம்-மாதங்கி; இவர்கள் தாம் சீவகனல்லது தாங்களென்று வேறில்லையாம்படி ஒருவனாயினன், என அவர் பிறிதோருரையும் எழுதிச் சென்றனர். ஆகவே இவற்றானெல்லாம், தன்னிகரில்லாத் தலைவன் எனக் காவிய இலக்கணம் வரைந்து விதந்த கதாநாயகன் சீவகன் என்பது கையிலங்கு

கனியாய்க் காணக்கிடந்தது. உலகினர் வாழ்வின் உயரிய நிலைக்கு உரையாணி போன்றனன் சீவகன். இங்ஙனம் எடுத்துக் காட்டாக உரியவனை 'ஆதர்ச புருஷன்' என்ப. ஆகவே சீவித்தல் உடைய வன் சீவகன் என்ற பொருளின் விரியாய் இதுவும் பொருந்தும் என்னலாம்.

இவ்வாறு சீவகன் கல்வி நிரம்பியவுடன் ஆசிரியர் அவனைத் தனியிடத்தே அழைத்து, மிக்க விரகாலே அவன் பிறப்பின் மறை யினை வெளிப்படுப்பாராயினர். அதுகேட்டு அவன் பதைபதைத்து மூர்ச்சித்து வீழ்ந்தான். பின்னரும் அவர் தேற்றத் தெளிந்து, சென்மப்பகையான கட்டியங்காரனைக் கொல்லச் சிங்கம்போலச் சீறி எழுந்தனன். அதுகண்டு அவர்

வேண்டுவல் நம்பி யானோர் விழுப்பொருள் (393)

என்று தமக்குக் குருதக்கிணை வேண்டினார் போலக் கூறி, அவ் வேண்டுகோள் வாயிலாக அவனை முயற்சிவிலக்கினர். 'இன்னும் ஓர் யாண்டளவும் நீ நின்னை வெளிப்படுத்தலாகாது; அதன் பின்னர் நீ எண்ணியது முடிக்க' என்பது அவர் ஆணையாயிருந்தது. அவனும் அதுவே தனக்கு உறுதியென உடன்பட்டனன்.

சீவகனுக்குக் கல்வி பயிற்றிய ஆசிரியர், உடன்சேர இவ் வர லாற்றினை இங்கு உணர்த்திய காரணம் என்னை? என்பது சிறிது விவரிக்க வேண்டும். பிறவாறெல்லாம் அவனுடைய அறியாமை இருள் நீக்கிய அவர், அவன் பிறப்பினைப் பற்றிய அறியாமை இருளையும் நீக்க விரும்பினர். அவனுக்குப் படைக்கல மெல்லாம் பயில்வித்த அவர், அப் பயிற்சியின் முடிந்த பயனாக, அவன் பகை வனைப் பழிவாங்கவும் பயில்விக்க விரும்பினர். அவன் நாமகளைச் சேருமாறு கல்லுதவி புரிந்த அவர், மண்மகளைச் சேருமாறும் வழி கோல விரும்பினர் இத்தகையவாக உய்த்துணர்வார்க்கு இங்கே காணும் பொருத்தங்கள் பல. இவ்வாறு இக் கதைப்பகுதி, ஆசிரி

யர் அவனுக்குக் கல்வி கற்பித்ததோடு பொருள்பற்றி ஒருகூறும் ஒன்றியதென்பதை,

> கைவரை யன்றி நில்லாக் கடுஞ்சின மடங்கல் அன்னான்
> தெவ்வரைச் செதுக்கும்நீதி மனத்தகத்து எழுதி (407)

என்ற தேவர் வாக்கானே சிக்கலறத் தெளியலாகும். [கைவரை அன்றி நில்லா-ஒழுக்கத்தின் எல்லை கடவாத; யானையோடு மாறுபட்டு அடங்கிநில்லாத என்றும் ஆம்.]

இனி, ஒருவரும் அறியா அருமறையான சீவகன் பிறப்பு ஆசிரியர் அறிந்தவாறு என்னை? என்பதும் ஆராயத் தகும். தந்தை கந்துகன் அதனை அவர்க்கு உணர்த்தினனென்றல் தகாத செய்தி. ஏனெனில் அவனுக்கும் தெரிந்திராத ஓர் இரகசியம் இங்கு அச்சணந்தி கூற்றில் அமைந்துள்ளது. தேவி விசயை சீவகனை வாழ்த்தித் தவம் மேற்கொள்ளலானாள் என்பது, அவள் தோழியான தெய்வத்துக்கே யல்லாது வேறெவர்க்கும் தெரியலாகாத உண்மை. ஆகவே இதனை அச்சணந்தி சீவகனுக்கு அறிவுறுத்தியது, அவர் அருந்தவத்தால் மெய்ம்மை யுணரும் ஆற்றல் விளக்கி நின்றது. இதற்கேற்பவே, மேலும் அவர்

> கேட்டளப் பரிய சொல்லும் இளரொளி வனப்பும் நின்னைச்
> சேட்டிளம் சிங்க மன்னாய் சாதகம் செய்த (404)

என, சீவகன் பிறப்பினைத் தாம் உணர்ந்தமைக்குப் பிறிதொரு வாயிலும் இல்லாமையைப் பேசியுள்ளார். [சாதகம் செய்த-பிறப்பினை அறிவித்தன.]

இவ்வாறு தன் தாயின் தன்மையைச் சீவகனுக்குத் தெரிவிக்க, தவத்தாற் பெரிய அச்சணந்திதவிரத் தகுதியுடையார் எவருமே இல்லை. ஆகவே இப் பிறப்பின் வரலாற்றை இங்ஙனம் அவர் வாக்கில் பெய்துவைத்த இச் சிந்தாமணிப்புலவரின் காவியப்புணர்ப்புக்கலைத் திறமை மிக்க மதிப்புக்குரியது. இது நிற்க.

இங்குச் சீவகன்வரலாறு கூறிய கதைப் பகுதி, சீவிப்பவன்-சீவகன் என்ற பொருளோடு தொடர்புடையது; இனி அச்சணந்தி தம் வரலாறு கூறும் கதைப் பகுதி, சீவிக்கச் செய்பவன்-சீவகன் என்ற பொருளோடு தொடர்புடைத்து. ஆதலின் அதுவும் சிறிது விவரிக்கத் தக்கதாம்.

அவர் முன்பு வெள்ளிமலையின் வாரணவாசி நகரத்து விஞ்சை வேந்தர்; உலோகமாபாலன் என்னும் பெயரினர். அவர் தம் மைந்தனுக்கு அரசுரிமை வழங்கி வனத்திற் சென்று தவம் புரியலாயினர். பூர்வசன்ம பாவத்தால் அவரை யானைத்தீநோய் பற்றிக் கொண்டு மிகத் துன்புறுத்தியது. அஃது ஒருவாற்றானும் தீரப் பெறாது வருந்திய அவர், இராசமாபுரத்துச் சீவகனைக் கண்டவுடன் அவ் இடும்பையின் நீங்கி இன்புற்றார். அதனால் அவர் அளவிலா ஆச்சரிய மெய்தி, தெய்வமோ என்று சிந்தித்து, அவன் வலையிலே சிக்குண்டனர். பின்னும் அவன் பிறப்பின் பெருமையை உணர்ந்து அவனுக்குக் கல்விபயிற்ற அவர் அவ் விடத்திலேயே தங்கினர். அவர் எண்ணம் நன்கு நிறைவேறிற்று. அதனால் மீண்டும் தவஞ் செய்ய அவர் விடைகொடு சென்றார். சென்றவர் ஸ்ரீவர்த்தமான தீர்த்தங்கரரின் சமவசரணமடைந்து, நோன்பியற்றி முத்திபதம் எய்தினர்.

இங்ஙனம் தன்னை அடைந்தவருடைய பாவப்பயனையும் அகலச் செய்யும் புண்ணிய புருடன் சீவகன் என்பது இதனால் போதரும். ஆகவே, பிறரைச் சீவிக்குமாறு செய்பவன்-சீவகன் என்ற பொருளின் விரியாய் இவ் வரலாறு இங்குப் பொருந்திற்று என்னலாம்.

[தொடரும்]

உ

சங்ககால மன்னர்கள்

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரி அவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(78-ம் பக்கத் தொடர்ச்சி)

மோரியமரபினர்

"பேரிசை மரபி னாரியர் வணக்கி" என்றார் பதிற்றுப் பத்துள் இரண்டாம் பத்துப் பதிக ஆசிரியர். பாவைக்கொட்டிலர் என்னும் புலவர் "வென்வேல் மாரியம்பின் மழைத்தோற் சோழர் வில்லீண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை ஆரியர் படையி னுடைக என்.......... வளையே" என்றார் (அகம் 336). "ஆரியரலறத் தாக்கிப் பேரிசைத் தொன்றுமுதிர் வடவரை வணங்குவிற் பொறித்து வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன் வஞ்சியன்ன என் னலந்தந்து சென்மே" எனப் பாணர் கூறியிருக்கின்றார் (அகம் 396). "ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப் பலருடன் கழித்த ஒள்வாள் மலையனது ஒருவேற் கோடி யாங்கு நம் பன்மைய தெவனோ" என நற்றிணை 170ம் பாட்டு நுவல்கிறது. இவற்றை நோக்கின், ஆரியர் தமிழ் நாட்டினுள் புகுந்தனர் என்பதும், சோரும் சோழரும் ஆரியரைத் தம் நாட்டில் புக விடாது தடுத்தனர் என்பதும், தமிழ்நாட்டு மன்னர் வடநாடு சென்று இமய மலையில் தம் இலச்சினையைப் பொறித்தனர் என்பதும் போதரும். "ஆரியர் பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போல" எனப் பாணர் (அகம் 276) குறிப்பதனால், யானைகளைப் பிடிப்பதில் மிக்க திறனுடையவர் ஆரியர் என்பது புலனாம். "ஆரியர் கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி வாகை வெண்ணெற் றொலிக்கும்" (குறுங் 7) எனப் பெரும்பதுமனார் குறிப்பதனால் ஆரியர்கள் கழைக் கூத்திலும் வல்லவர் என்பது விளங்கும். இதனை "ஆரியக் கூத்தாடினும் காரியத்தில் கண்" என்னும் பழமொழியும் வலியுறுத்தும். "ஆரியர் பொன்படு நெடுவரை" (அகம் 398) என இமயமலையைக் குறிக்கின்றார் இம்மென் கீரனார்.

ஆரியப்பொருநன் ஒருவன் பரணரால் குறிக்கப்படுகின்றான். ஆரியவரசன் பிரகத்தன் என்பான் ஒருவன் கபிலரால் தமிழறிவுறுத்தப் பெற்றான். அவ்வரசன் மோரியமரபினரில் இறுதி மன்னவனாவன். ஆதலின், ஈண்டுக் குறிக்கப்படுகின்ற ஆரியர் மோரியரே யாவர் என்பது காலநிலை நோக்கி யுணரவேண்டுவதாம்.

வடநாட்டு (மகதநாட்டில்) ஆட்சி செலுத்திய நந்தரை யழித்து அரசெய்திய சந்திரகுப்தருடைய மரபினர் மோரியராவர். 'அச் சந்திரகுப்தன் தென்னாடு நோக்கிப் படையெடுத்து வந்தனன்; மகிஷமண்டலத்தில் தங்கியிருந்தனன்' என்பது சாஸன ஆராய்ச்சியால் அறிவதாம். நம் சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் எருமைநாடு அம் மகிஷமண்டலமே யாதல் வேண்டும். எருமை நாட்டது அயிரியாறு என்பதும் இதனை வலியுறுத்தும். அசோகனும் அவனுக்குப் பிற்பட்டவரும் தென்னாடு நோக்கிப் படையெடுத்து வந்தனர். "விண்பொரு நெடுங் குடை இயல்தேர் மோரியர், பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த அறை" என உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனாரும் (அகம் 69), "வெல்கொடித் துனைகா லன்ன புனைதேர்க் கோசர் தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில் இன்னிசை முரசம் கடிப்பிகுத் திரங்கத் தெம் முனை சிதைத்த ஞான்றை மோகூர் பணியாமையின் பகைதலைவந்த மாகெழு தானை வம்ப மோரியர் புனைதேர் நேமி யுருளிய குறைத்த இலங்குவெள் ளருவிய அறைவா யும்பர்" என மாமூலனாரும் (அக 251) குறிப்பதனால் தென்னாட்டில் சோணாட்டெல்லைப் பகுதி வரையிலும் இவர்கள் வந்தனர் என்பது பெறப்படும். மலையமான் திருமுடிக்காரி முள்ளூர்ப் பகுதியில் ஆரியரலறத் தாக்கினன் என்பதும் இவரது தென்னாட்டு வருகையைக் குறிக்கும். "முரண்படு வடுகர் முன்னுற மோரியர் தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து ஒண்கதிர்த் திகிரி உருளிய குறைத்த அறை" என (அகம் 281) மாமூலனார் குறிக்கும் பகுதி வேங்கடமலைப் பகுதி யதாமெனக் கருதப்படும். "விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர் திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த உலக விடைகழி யறைவாய்" எனக் குறிக்கும் பகுதி (புறம் 175) இமயமலைக்கு அப்பாற்பட்ட பகுதி எனக் கருதப்படுகிறது.

கோசர்மரபினர்

கோசர் வடநாட்டிருந்து வந்தவர்; முதலில் கொங்குநாட்டில் வதிந்த னர்; பிறகு குடநாட்டில் குடியேறினர். குடகக்கொங்கர் எனக் குறிக் கப்படுபவர் இவரே யாவர்.—குடகு நாட்டில் குடியேறிய கொங்கர் இவர் கள். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்னும் நான்கு மொழிகளும் வழங்குதற்குரிய எல்லையில் இவர்கள் வாழ்ந்திருத்தல் வேண்டும். ஆதலின் இவர்கள் நான்மொழிக்கோசர் எனக் குறிக்கப் படுகின்றனர். நான்மொழிநாட்டில் வாழ்ந்தனர் ஆதலின் இப்பெயர் பெற்றனர். இந் நான்மொழிநாடு மழகொங்கு நாட்டின் வடக்கண் உள்ளதாம். இவர்கள் நாலூர்க்கோசர் எனவும் நல்லூர்க்கோசர் எனவும் வழங்கப்பெறுவர். திருநெல்வேலிப் பகுதியிலுள்ள கழுகுமலைச் சாஸ னங்களில் நாலூர் என்னும் ஓர் ஊர் குறிக்கப்படுகிறது. அக் கழுகு மலையை யடுத்துக் குழுவாவணநல்லூர் என ஒரூர் உண்டு. அப்பகுதிகள் கோசர் வாழ்ந்த இடமாகும். ஆதலின் நல்லூர் என்னும் சொல்லே நாலூர் என மருவியதோ என எண்ணவும் இடனுண்டு. 'கோசர் குசருடைய மரபில் வந்தவர்; குசருடைய மக்கள் நால்வரும் நால்வேறு ஊர்களை யமைத்து ஆட்சி செலுத்தினர்; எனவே அம்மரபினர் நாலூர்க் கோசர் எனப்பட்டனர்' எனக் கூறுதலுமுண்டு. இவர்கள் நன்மொழிக் கோசர் எனக் குறிக்கப்படுதலுமுண்டு. ஆதலின் 'நன்மொழி' 'நான் மொழி' ஆயிற்றோ? என ஐயுறுவாரும் உண்டு.

கோசர் இரும்பிடம்படுத்த வடுவுடைமுகத்தர்; கள்ளருந்துவதில் விருப்பமுடையவர்; நன்றல் காலையும் நட்பில் கோடாதவர்; சென்று வழிப்படூஉந் திரிபில் சூழ்ச்சியர்; வாய்மொழி விடாது போற்றுபவர்; வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பினர்; சபத விரதங் கொண்டவர். கோசம் என்னும் சொல்லுக்குச் சபதம் என்பது பொருள். இவர்கள் இளங்கோசர் முதுகோசர் என இருவகைப்படுவர். கீழ்க்கடற்கரைப் பக்கத்ததாகிய செல்லூர்க்குக் குணக்கிலுள்ளதாகிய நியமம் இக் கோசர்க்குரியது. நெய்தலங் கானல் என்பதும் கோசர்க்குரியது.

(அகம் 90, 113). இவர்களை இளஞ்சேட்சென்னி, கிள்ளிவளவன் ஆகியோர் தாக்கினர் (அகம்203). இவர்கள் பாண்டியர்களால் சிறப்பெய்தப்பெற்றவர்கள்; பாண்டியர் படைவீரர்களாகப் படைத்தலைவர்களாக விளங்கினர். இவர்கள் மோகூர் மன்னனுக்குத் துணையாக நின்று மோரியரை எதிர்த்தனர் ஆதலின், மோரியர் தென்னாடு நோக்கி வருதற்குமுன்னமே இங்கு வந்தவராவர்.

திதியன்

இவன் பூதப்பாண்டியனுக்குத் துணைவன் (அகம் 125). இவன் கோசர் மரபினன் (அகம் 331); வேளிரொடு பகைமை கொண்டவன். இவனுக்குப் பொதியில் மலை உரியது. பொதியில் மலைப்பகுதியில் வாழ்ந்த ஆய்வேளை இவன் வென்றனனோ என எண்ண இடனுண்டு; காரணம் பொதியில் மலை உரிமையே.

பயறு ஆபுக்கெனத் தந்தையைக் கண்களைந்து, அருளாது ஊர் முது கோசர் நவைத்த சிறுமையினால், அன்னி மிஞிலி என்பாள் சினத்திற்கொண்ட படிவம் மாறாளாகி, வாலிது முடாது, கலத்துமுண்ணாது தங்கட்கியல்பாகிய கோச முறையில் பழிக்குப்பழி வாங்குவதாக விரதம் பூண்டவளாய்த் தங்களிற் றலைவராயுள்ள குறும்பியனுக்கும் திதியனுக்கும் தன் விரத வரலாறு கூறினாள். திதியன் குறும்பியன் துணையாக அங்ஙனம் கண்களைந்த முதுகோசரைக் கொன்று தன் இனத்தவர்களுக்குண்டான முரண்பாட்டைப் போக்கினன். அன்னிமிஞிலி சினம்மாறி மிடுக்குடனியன்றனள் (அகம் 196, 262). இது கோசர்களுக்குள்ளேயே நடந்த போர்.

இத் திதியன் ஆட்சியுட்பட்டது அழுந்தை என்பதோரூர். இது குடமலை நாட்டது என்பர் திரு. ரா. இராகவையங்கார் அவர்கள். இவன் சோழநாட்டில் பாண்டியர்க்குத் துணையாய்ப் புகுந்து குறுக்கையில் அன்னி என்னும் வேளினுடைய காவல் மரமாகிய புன்னையை வெட்டி வீழ்த்தினன் (அகம் 126, 180, 331).

ஞிமிலி

இவன் கோசர் மரபினன். பாண்டியன் படைமுதலியும் கோசனுமாகிய அதிகன், நன்னனது படைத்துணையாகிய வேண்மான் எயினனுக்குரிய வாகையூரில் அவ் வெயினனால் இறந்துபட்டதைச் செவியுற்று, அஃதை என்பான் தன் இனத்தவன்பட்டது பொருது நன்னனோடு பொருதற்கெழுந்த காலத்து, போர்க்கெழும் போதே புள் நாடு கடிந்ததெனக் கூறி நன்னனை விலக்கி எயினன் போர்க்கெழ, கோசர் தலைவனான ஞிமிலி, தன் காதலி வசம்செய்ததும் நன்னன்பாழியிலுள்ளதுமான பேய்க்கு அதிகனைக் கொன்ற எயினனை ஊட்டுவதாக வஞ்சினம் மொழிந்து, அஃதைக்காக அவ் வெயினனொடு போரிட்டனன். எயினன் போர்க்களத்தே வீழ்ந்தனன். தனக்காக உயிர்கொடுத்த எயினன் வீழ்ந்ததைக் காணவும் செல்லாது கரந்தொழுகினன் நன்னன். வேண்மகளிர் எயினன் வீழ்ந்ததுபற்றியும் தங்கள் குலத்தலைவனான நன்னனைக் காணாமைபற்றியும் அழுது பெரும்பூசலிட்டனர். அக் களத்தே வாய்மொழி ஞிமிலிக்குத் துணையாகப் பெருந்தானையுடன் நன்னனொடு பொருதற்கு நின்ற அஃதை அப் பகைவர் மகளிர்க்கு இரங்கி அவர்களது பூசலைக் களைந்தனன் (குறுந் 393, அகம் 142, 162, 181, 208, 396).

அஃதை

இவன் கோசர் மரபினன் (அகம் 117); பாண்டிய மன்னனால் சிறப்பிக்கப் பெற்றவன்; பாண்டியன் தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் காலத்தவன். அப் பாண்டியனுக்கு முன்னும் பாண்டியர் தலைவனாய் வாழ்ந்தவனாதல் வேண்டும். "அஃதை கூடல்" எனக் குறிக்கப்படுவதனால் இவனுக்குப் பாண்டியரோடுள்ள உறவு துணியப்படும். வேண்மான் எயினனால்இறந்த அதிகனுக்காகப் போர்க் கெழுந்தவனாதலின் இவனது காலம் துணியப்படும். நன்னனுக்கும் இவனுக்கும் பகையுண்டான செய்தி நன்னன், ஞிமிலி, எயினன் ஆகியவர் வரலாறு கூறிய பகுதிகளில் குறிக்கப்பட்டுளது. இவன் வெள்ளெவ்வியைப் போரில் வென்று மிழலைக் கூற்றத்தையும், முத்தூற்றுக் கூற்றத்தையும் கவர்ந்து பாண்டியனுக்கு அளித்தனன்.

மோகூர்ப்பழையன்

இப் பழையன் பாண்டிய மன்னனால் சிறப்பிக்கப் பெற்று வாழ்ந்தவன்: வேம்பினைக் காவன்மரமாக வுடையவன். இம் மோகூர் தென்னார்க்காடு ஜில்லாவில் கள்ளக்குறிச்சி தாலூகாவில் உள்ள தென்பர். இவன் கோசர் மரபினன். மோரியர் இப் பழையன் மீது படையெடுத்த போது கோசர் மரபினராகிய வீரர்கள், பழையனுக்குத் துணைசெய்தனர் (அகம் 251, 281). கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் கடம்பரோடு (கன்னனொடு) பொருதகாலையும் கோசர் மரபினரான வீரரோடு போர் புரிந்தனன் (பதிற் 41). இக் குட்டுவன், தன்நண்பன் அறுகை என்பானுக்கு உதவி செய்வதற்காகத் தானே போர்மேற்சென்று இப் பழையனை வென்றனன் (பதிற் 49).

பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் படைத்தலைவனான மாறன் என்பான் இப் பழையனுக்கு மகன்போலும் (மதுரைக் காஞ்சி 770-774). கூடலில் கிள்ளிவளவனை வீழ்த்திய பழையன் மாறன், இப் பழையன் மகனாவன் என்பதை அவன் காலத்துச் சேரமன்னன் கோதையாவன் என்பதனாலுணர்க (அகம் 346).

ஆதனெழினி

இவன் கோசர் தலைவன்; செல்லிக் கோமான் (அகம் 216). செல்லி என்பது செல்லூர்க் கொருபெயர். இவ் வூர் சோணாட்டதாகும் (புறம் 386). இவன் யானைப்போரிற் சிறந்தவன் (அகம் 216). யானைப்போரில் பயிற்சியால் சிறந்தாரை அத்திகோசர் எனக் குறிப்பது மரபு.

தழும்பன்

இவன் கோசர் பெருவீரன்; பாண்டிநாட்டு மருங்கூர்ப் பட்டினத்தையடுத்த ஊணூரிலிருந்தவன் (புறம் 368). வழுதியாகிய பாண்டியர்க்குத் துணையானவன் (அகம் 227). இவன் போரிற்பட்ட பெரும் புண்ணால் உண்டாகிய அழகிய தழும்புடைமையால் தழும்பன் என்னும் பெயர் பெற்றான்.

[தொடரும்]

இராமாயணம்—நூல்வரலாறு

மட்டுநகர் வித்துவான், பண்டிதர் திரு. F. X. C. நடராசா அவர்கள்,
Research Assistant, Official Languages Commission, Colombo.

இராமாயணம் என வழங்கும் பாரகாவியத்தைக் கம்பர் பாடுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இராமன் கதை செந்தமிழ் நாட்டிற் பரவியிருந்தது. சங்ககாலத்துப் புலவர்கள் இராமன் கதையை நன்கறிந்திருந்தனர் போலும். அவர்களாற் பாடப்பெற்ற பல செய்யுள்களில் இராமன் கதையைப்பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. சங்கநூலாகிய புறநானூற்றில்

கடுந்தே ரிராம னுடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை

என்று கூறப்பட்டிருப்பதால் மூன்றாம் சங்ககாலத்திற்கு முன்னரே செந்தமிழ் நாட்டில் இராமன்கதை பரவியிருத்தல் வேண்டுமென்பது வெள்ளிடைமலைபோலப் புலப்படுகிறது. புறநானூற்றில் மாத்திரமன்று; வேறு சங்கநூல்களிலும் இராமாயணச் செய்திகளைப் பரக்கக் காணலாம். ஆகவே ஆரியரின் ஆதிக்கம், நூற்கொள்கை சங்ககாலத்திலும் அதற்கு முன்னும் வெகுவாய்ப் பரவியிருக்கவேண்டு மென்பது புலனாகின்றது.

இராமாயணம் முதன்முதலாக வால்மீகி மகாமுனிவரால் இயற்றப்பட்டது. வடமொழிநூல் வல்லாரும் இதனை ஒப்புக்கொள்ளுகின்றனர். வடமொழியிலே நான்கடிச் சுலோகங்களை ஆதியிலே செய்துகாட்டி மற்றைய புலவர்களும் கைக்கொள்ளுமாறு அம்முறையினைச் செம்மையுறப் பாடினபடியால், இந்த வான்மீகி முனிவரை 'ஆதிகவி' என்றும் அவர் செய்த இராமாயணத்தை ஆதிகாவியம் என்றும் வடநூலார் கூறுவர். செந்தமிழ் மொழியில் இராமாயணத்தை யாத்த கம்பநாடரும் தேவபாடையி லிக்கதை செய்தவர் மூவராவாரென்றும், அவர்களுள் முந்தியவர் வால்மீகி என்றும் அவர் கதையினைத் தழுவியே தானும் தமிழ்ப்பாவினாலுணர்த்துவதாகவும் சொல்லுகின்றார்.

தேவ பாடையி லிக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளு முந்திய
நாவி னுரை யின்படி நான்றமிழ்ப்
பாவி னுவி துணர்த்திய பண்பரோ

என்று பாடியுள்ளார் கம்பர்.

வடமொழியில் மூவர் நூல்செய்தும் வால்மீகியின் பெயர் அறியப்பட்டது போல் மற்றைய இருவர் பெயரும் அறியப்படவில்லை. ஆனல் மூவகைப்பட்ட பாடங்களும் வடமொழியில் இன்று முண்டு. அவை ஒன்றுக்கொன்று அதிகம் வித்தியாச முடையன என்பர். வால்மீகி முனிவராற் செய்யப்பெற்ற நூலில் ஏழு காண்டங்களும் ஐநூறு சருக்கங்களும் இருபத்து நாலாயிரம் சுலோகங்களும் உள்ளனவென்று பாலகாண்டத்தும் உத்தரகாண்டத்தும் சொல்லப்பட்டுள்ளது.

ஆனல் அச்சேறிய நூற்பதிப்பில் 661 சருக்கங்களும் 24133 சுலோகங்களும் காணப்படுகின்றன. ஆகையினுற்போலும் இப்போதுள்ள சங்கத இராமாயணம் முழுமையும் வால்மீகியால் இயற்றப்படவில்லை யென்றும், அதிலுள்ள பல கதைகளும் கருத்துக்களும் பின்னர்ச் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் பலர் கருதுகின்றனர். இடைச் செருகலாக ஏற்பட்ட கதைகளும் கருத்துக்களும் கொண்ட நூல் கி. மு. இரண்டாம் நூற்ருண்டுக்கும் கி. மு. முதலாம் நூற்ருண்டுக்கு மிடையிலே தோன்றியிருக்கலாமென நிச்சயிக்கின்றனர்; ஏனெனில் புத்தரைப்பற்றிய சுலோகமும் வேறு பிற்கால நிகழ்ச்சிகளும் கூறப்பட்டிருப்பதனுலென்க.

இராமன் கதாநாயகனுகையால் நூலுக்கு இராமாயணம் எனப் பெயரிடலாயிற்று. இராமசரிதம் எனவும் வழங்குவர்; சீராமகதை யென்றும் வழங்குவர்; சீதை இந்நூலில் கதாநாயகியா யிருத்தலால் இக்காவியத்தைச் சீதையின்சரிதம் எனவும் அமைப்பர். புலத்தியர் மாபிலுதித்த இராவணுதி இராட்சதர்கள் அழிக்கப்பட்ட வரலாறு வருவதால் புலத்தியவதம் எனவும் வழங்கப்படுகிறது இராம சரிதம், சீதையின் சரிதம், புலத்தியவதம் என இந் நூலுக்குப் பெயர்கள் ஏற்படலாயின. இன்னும் அத்தியாத்தும ராமாயணம் என்று

வழங்கப்படும் காவியமு முண்டு. இது கிருட்டினத்துவைபாயனர் எனப்படும் வியாசமுனிவராற் செய்யப்பட்டதென்பர். அத்தி யாத்துமம் எனினும் பரமாத்துமா எனினும் ஒக்கும். ஆகவே பரமாத்துமாவாகிய இராமபிரானுடைய சரிதங்கூறும் நூலென்க. இந்நூலைப் பிரகடனஞ் செய்தவர் இதன் முன்முகத்தில் 'இது பதினெண் புராணங்களுள் ஒன்ருகிய பிரமாண்ட புராணத்திலுள்ள உமா-மகேசுர சம்வாதத்தினைச் சார்ந்து, கருமம் ஞானம் முதலியவைகளையும் பலவகை யறங்களையும், அரச நீதிகளையும் அறிவிக்கும்படி வியாசமுனியர் செய்தது' என்கிருர். வடமொழியில் மூவர் இராமகதை செய்தனர் எனவும் அவர்களுள் முதல்வர் வான்மீகி எனவும் அறிந்தோம். கம்பநாடரும்

வாங்கரும் பாதநான்கும் வகுத்த வால்மீகி யென்பான்

என்று கூறி வால்மீகியைப் புகழ்கின்ருர்.

வால்மீகி சத்த முனிவர்களால் உபதேசம் பெற்று நெடுங்காலமாக அசைவின்றித் தவத்திலிருந்தபோது, புற்று வளர்ந்து மூடிற்றென்றும், அம் முனிவர்களே வந்து புற்றினின்றும் அவரை எழுப்பி 'வான்மீகி' என்னும் பெயரும் கொடுத்துச் சென்ருர்களென்றும், தமது பூர்வ கதையை இராமபிரானுக்குக் கூறியதாக இராமாயணத்தில் அறிகிரேம். வான்மீகம் என்பது புற்று.

இராமாயணம் செய்த மற்றைய இருவரும் யாவரென்று புலப்படவில்லை. சிலர் போதாயனரும் வசிட்டரும் என்பர். வேறு சிலர் போதாயனரும் சிவனும் என்பர். போதாயனர் செய்தது "மகாநாடகம்", வசிட்டர் செய்தது "வாசிட்டம்", சிவன் செய்ததுதான் "அத்தியாத்துமராமாயணம்" என்று கூறுவர். வாசிட்டம் இராமகதையாகக் காணவில்லை. இந்த அத்தியாத்தும ராமாயணத்தைச் சிவபெருமான் செய்ததாகவும் தோன்றவில்லை. பல நூல்களில் இதனைச் சிவபெருமான் உமாதேவிக்கு உபதேசித்தார் என்பது தான் காணப்படுகிறது. இந்த நூலின் இறுதிச் சுலோகத்திலும் "இந்த இராமாயணம் சிவபிரானல் உமாதேவிக்கு உபதேசிக்கப்பட்டது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. வடமொழியில், பட்டிகாவியம் போசசம்பு, இராமோதந்தம் முதலிய நூல்களும் இராமகதை கூறுவன.

இனி, செந்தமிழ் நாட்டில் இராமகதை பரவிய வரலாற்றையும் நூல்கள் யாக்கப்பெற்ற வரலாற்றையும் அறிவாம். தமிழ்நாடறிந்த இராமகதை கம்பரால் செய்யப்பெற்றது. இதற்குக் கம்பரிட்ட பெயர் "இராமாவதாரம்" என்பது. கம்பரே தமது நூலில்

"நடையி னின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநிகழ்ந்த இராமாவதாரப் பேர்த்
தொடை நிரம்பிய தோமறு மாக்கதை"

என்பதனால் இராமாவதாரம் என்றே பெயரிட்டனர் எனத் தெரிகின்றது. ஒட்டக்கூத்தரும் இராமகதை பாடினவர் என்பர். இராமாயணத்திலுள்ள உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தர் பாடல்களாலானது என்பர். இது நிகழ்ந்தது 12-ம் நூற்றாண்டில். 16-ம் நூற்றாண்டில் துளசிதாஸர் என்னும் வைணவசமயப்புலவர் இராமசரித மானஸம் என்ற நூலை இயற்றியுள்ளார். இவர்களுக்குப்பின் இராமன் கதையில் எவரும் கைவைக்கவில்லை. இவர்களின் நூல்கள் மூலம் தமிழ்நாட்டில் இராமன்கதை அதிகம் பரவலாயிற்று. திராவிட மொழிகள் ஒவ்வொன்றிலும் இராமன்கதை யாக்கப்படலாயிற்று.

கம்பர் இராமன்கதையினைச் சங்கதமொழியினின்றும் மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்ததன்பின்பே இராமன்கதை தமிழுலகத்தில் அறியப்பட்டதெனல் சரியன்று. அதற்கு முன்பே சங்க கால இலக்கியங்களில் அக்கதை சிற்சில அடிகளில் தொனிக்கின்றது. கதை முழுவதும் நூல்வடிவத்திலிருந்ததாகவும் அறிகின்றோம். பாரதம்பாடிய பெருந்தேவனார்

எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்

என்று திருவள்ளுவமாலையில் வரும் தமது பாட்டினால் இராமகதை ஒன்றிருந்ததை அறிவித்துள்ளார். பெருந்தேவனார்பாரதம் போல வெண்பாயாப்பில் அமைந்த சிராமகதையென்ற நூல் பெருவழக்காயிருந்தபடியாற் போலும் யாப்பருங்கல விருத்திகாரர்

"பாதம் பலவரிற் பஃறொடை வெண்பா"

என்ற சூத்திர உரையில் "இராமாயணமும் புராணசாகரமும் முத லாய செய்யுட்களிற் கண்டுகொள்க" என்று எழுதியுள்ளார். வீர சோழிய உரையிற் கண்ட சில மேற்கோட்பாடல்கள் வெண்பாவாக வும் இராமகதை கூறுவனவாகவும் காண்டல் கூடும். அப்பாடல் களாவன:—

மற்றிவனை மாலென் றறிந்தாலவ் வாளரக்கன்
பெற்றி கருதுவதென் பேதையர்காள்—மற்றிவன்றன்
கண்டான் கடைசிவந்தற் குண்டோ கடலிலங்கை
வண்டா ரரக்கன் வலி

ஐயிருபதோசனையு மாங்கோ ரிடனின்றிக்
கைபரந்த சேனைக் கடலொலிப்பத்—தையல்
வழிவந் திராமன் வடகரையா னென்றான்
விழிவந்து வேறாக மீட்டு.

வடமொழியில் இராமகதையை யாத்தவர் வால்மீகியெனக் கண்டோம். இவர் இக்கதையினைப் பாதநான்கினில் வகுத்துக்காட் டியதன் காரணம் யாது? வால்மீகி தவஞ்செய்து கொண்டிருக்கும் போது நாரதமுனிவர் அவரைத் தரிசிக்கச் சென்றனர். உலகத் திற்சிறந்தவன் யாரென்ற விசாரிப்பு ஏற்பட்டது. நாரதர் இராமன் என்று கூறி அவ் விராமனின் சரிதம் முழுவதையுங் கூறினர். இராமனின் கதையை நினைத்தவாறே கங்கையாடச் சென்ற வால்மீகி, வேடனொருவனால் ஆண்பட்சி கொல்லப்படப் பெண் சக்கரவாளம் கதறுவதைக் கண்டனர். அப்போது அவர் மனத்தி லேற்பட்ட சோகம் சுலோகமாக வெளிவந்தது. அப்போது பிரமா பிரசன்னமாகி இராமாயணத்தை இயற்றவேண்டுமென்றும், இரக சியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியெல்லாம் அவருக்குப் புலப்படு மென்றுங் கூறி மறைந்தனர். நூலை இயற்றி யாருக்குக் கற்பிக்கலா மென்றும் நினைந்தனர்; நினைந்ததும் குசலவர் முன்னின்று அடி பணிந்தனர். இரகசியத்தில் நடந்த நிகழ்ச்சியெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றினவென்று இராமாயணத்திற் கூறப்பெற்றுளது. இரகுவம்சத்தில் வால்மீகிபாடிய இராமாயணத்தைக் குசனும் இலவ னும் பாடிப்பழகினர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இராமா யணத்தில் சோகச் சுவை மிகுந்திருப்பதன் காரணம், முன்கூறிய பட்சிகளின் கதையே யென்க.

இராமாயணத்தில் புதைபொருளைப்பற்றிப் பலரும் பலவாருகக் கூறுவர். ஆரியர் பரதகண்டத்தின் தென்பாகத்தை வென்ற செய்தியைக் கதைவடிவாக்கினர் என்பர் ஒரு சிலர். தென்னாட்டிலும் ஸ்ரீஈழத்திலும் வைதிக மார்க்கம் பரவியதைக் கதையாகக் கூறினர் என்பர் வேறு சிலர். கிரேக்கர் கதையாகிய 'இலியது' என்ற காவியத்தின் பிரதிவடிவமே இராமாயணம் என்பாருமுண்டு. உண்மை இலக்கியம் ஆடவர் பெண்டிர் மனத்தில் பலவித உள்ளக் கிளர்ச்சிகளைத் தூண்டி விடக்கூடிய ஆற்றல் படைத்தது. புலவரின் செம்மைசேர் உள்ளத்தின் நிறைவால் வழிந்தோடிவரும் நன்மை சேர் புலப்பாடுகளே இலக்கியமாக அமைவதால் அவ்வகை இலக்கியங்கள் அளிக்கும் நற்பயன்கள் பல. இராமாயணத்தில் இராமனின் வீர தீரச் செயல்களையும் ஒழுக்க நெறிகளையும் காணும் தமிழ் இளம் செம்மல்கள், தங்களை அப்பழுக்கற்ற வீரர்களாக்க விரும்புவர். பெண்மணிகள் சீதையை நினைவுகூர்ந்து கற்புக் கனிகலங்களாக ஆகின்றனர். மறவழி புகுந்த இராவணனின் முடிவை நினைத்து மக்கள் அறவழி நிற்க முயல்கின்றனர். வில்லின் செல்வனுக்குகந்த தூதுவனும் சொல்லின்செல்வன் அநுமானின் உண்மை நெறியைக் காண்பார் அவன் மயமாகின்றனர், வணக்கமும் புரிகின்றனர். ஸ்ரீலட்சுமணன் எனப் போற்றப்படும் குரிசிலை நினைக்கும் போது அடக்க ஒடுக்கமாகச் சேவைபுரிய முன் வருகின்றனர் மாந்தர். 'அற்றார்நவை யென்றலுக் காருளர்' என்ற கம்பரின் வாக்கைக் கேட்கும்போது எந்தக் குற்றவாளியும் நிம்மதியடைகின்றான். 'தீயன செய்யாராயின் யாவரே செறுநராம்மா' என்பதைப் படிக்கும்போது, இவ்வுலகில் யார்தான் தீச்செயல்புரிய முற்படுவர்? என்னே இலக்கியத்தின் மேன்மை!

கம்பரும் துளஸிதாஸரும்-சு

திரு. தி. சேஷாத்திரி அவர்கள், M. A., ஆசிரியர், மதுரைக்கல்லூரி.

(91-ம் பக்கத்தொடர்ச்சி)

மூத்தாள் இளையாள் முறை

தசரதன் மனைவியரான கோசலை, சுமித்திரை, கைகேயி என்பவருள் மூத்தாள் இளையாள் முறையைப் பற்றிக் கம்பநாடர் திருவவதாரப் படலத்தில் கூறுகிறார். பூதம் அமிர்தினைத் தரைமிசை வைத்து வேள்வித்தீவழி மறைந்தபின்னர் தவத்தின் நல்லரசனை வசிஷ்டன் அமிர்தினை உரிய மாதர்கட்கு அத்தகு மாபினால் அளித்தியால் என்றான்.

மாமுனி யருள்வழி மன்னர் மன்னவன்
தூமமென் சுரிகுழல் தொண்டைத் தூயவாய்க்
காமரொண் கௌசலை கரத்தி னோர்பகிர்
தாமுற அளித்தனன் சங்கம் ஆர்த்தெழ

மாமுனி அருள மன்னர் மன்னவன் அகிற்புகை யுண்ட மெல்லிய கரிய குழல், தூய தொண்டை வாய், அழகிய ஒட்பமுடைய கௌசலையின் கரத்தில் ஒரு பாகத்தை அளித்தான்; அவ்வமயம் சங்க வாத்தியங்கள் முழங்கின; என்று பொருள்படும் இந்தப் பாவினால் கௌசலையே முறையில் மூத்தவள் என்ற கருத்துத் தெளிவாகிறது.

அடுத்தபடியாக 'கைகயன் றநயை தன் கரத்தும் அம்முறைச் செய்கையின் அளித்தனன்' என்றவாற்றால், கைகேயியே முறையில் அடுத்தவள் என்று அறியக் கிடக்கிறது.

பகுதியைக் கௌசலைக்கும் பகுதியிற்பகுதியைச் சுமித்திரைக்கும் தந்தது முறை. மூத்தவளுக்கு முன்னமும் அடுத்தவளுக்குப் பிறகும் கொடுத்ததும் அதற்குள் அடங்கும் முறையாம். இந்த இரண்டு முறைகளையும் கருத்தில் இருத்தி, அடுத்த இரண்டுசெய்யுட்களில் கூறப்பட்ட கருத்தை நோக்கின் சுமித்திரை அடுத்தவள் என்றும், அவளுக்கு முதலில் முதல்இருவருக்கும் கொடுத்ததுபோக எஞ்சியதில் பகுதியைத் தந்தான் என்றும், மீண்டும் எஞ்சியதை அப்படியே தந்துவிட்டான் என்பதும் அறியப்படும் கருத்தாம்.

நமித்திரர் நடுக்குறு நலங்கொண் மொய்ம்புடை
நிமித்திரு மரபுளான் முன்னர் நீர்மையில்
சுமித்திரைக் களித்தனன் சுரர்க்கு வேந்தினிச்
சமித்ததென் பகையெனத் தமரோ டார்ப்பவே

எதிரி நடுக்கமுற நலங்கொண்ட வலியுடைய நிமி மரபில்வந்த தயரதன்முன் மேற்கொண்ட முறைப்படியே சுமித்திரைக்கு அளித்த னன். சுரர்க்கு வேந்தன் என்பகை ஒழிந்தது என்று ஆர்த்தான். முறை எது? எஞ்சியதை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை அடுத்தவ ளுக்குக் கொடுப்பது. அப்படியே மன்னன் மூன்றுமவளான சுமித் திரைக்கு இரண்டு முறை பகிர்ந்து எஞ்சியதை மூன்றும் முறையாகப் பகிர்ந்து ஒரு பாகத்தை அளித்தான். கணக்குப்படி பார்த்தால் அரைக் கால்பங்கு அமிர்தம் அளிக்கப்பட்டு அரைக்கால்பங்கு அமிர்தம் எஞ்சி யிருக்கிறது; அது என்னவாயிற்று?

"பின்னுமப் பெருந்தகை பிதிர்ந்து வீழ்ந்தவை தம்மையும் சுமித்திரை தனக்கு நல்கினுள்" என்று அமிர்தம்பகிர்ந்த படலம் முடி கிறது கம்பரது கதையில்.

துளஸியைப் பார்க்கலாம்:

தப் அதிருஸ்ய பயே பாவக சகல சபஹி சமுஜாயி !

சபையிலுள்ள எல்லோரிடத்திலும் விஷயத்தைச் சொல்லிவிட்டு அக்னி மறைந்தார்.

தபஹி ராய ப்ரிய நாரி போலாயீ(ம்)
கௌஸல்யாதி ததஹா(ம்) சலி ஆயீ(ம)

அப்பொழுது அரசன் தன் அன்புக்குகந்த மனைவியரை அழைத் தான். கௌசலை முதலியோர் அங்கே வந்தனர்.

அரத பாக கௌஸல்யஹி தீன்ஹா
உபய பாக ஆதே கர கீன்ஹா

பாதிப்பங்கை அரசன் கௌசலைக்குத் தந்தான். மிஞ்சிய அரைப் பாகத்தை இரண்டாகச் செய்து கொண்டான்.

கைகேயி கஹம் ந்ருப ஸோ தயஊ
ரஹேஉ ஸோ உபய பாக புனி பயஊ

மன்னன் ஒரு பகுதியைக் கைகேயிக்குத் தந்தான். மிகுந்து தங்கியதை மீண்டும் இரண்டாகப் பிரித்தான்.

கௌஸல்யா கைகேயி ஹாத் தரி
தீன்ஹ ஸுமித்ரி ஹி மன பிரஸன்ன கரி

கோசலை கைகேயி இருவரையும் தொட்டுக்கொடுக்கச் சொல்லி, அந்த இரண்டு பகுதிகளையும், மனம் ஆனந்தத்தால் நிறைய, சுமித்திரைக்குக் கொடுத்தான்.

துளஸிதாஸர் காட்டிய முறைமையிலும், கௌசலை கைகேயி இருவரும் சுமித்திரைக்கு மூத்தவரே என்று காட்டியுள்ளார். 'முறைப்படி' என்று சொல்லி, கம்பநாடர் அந்தக் கருத்தைத் தெளிய வைத்து நிலை நிறுத்தினர், இங்கே துளஸிதாஸர் இரண்டு பங்குகளாக ஆக்கி மூத்த இருவர் கைகளிலேயும் கொடுத்து வாங்கி சுமித்திரைக்குக் கொடுக்கச் செய்து, ஹிந்துக்கள் மூத்தோரிடம் கொண்டுள்ள பெருமையைக்காட்டியதுடன் அல்லாமல், மூவருள் முறையே யார் மிகவும் பெரியவர், யார் மிகச் சிறியவர் என்றும் காட்டிவிட்டார்.

இந்தக் கருத்தில் இருவருக்கும் ஒருமைப்பாடே! வான்மீகி முனிவர் கருத்து இதற்கு வேறுபாடாயது என்று பெரியவர் படித்தவர் கூறுவர். மீட்டும் இதே கருத்தைக் கம்பநாடர் 'இளையமென் கொடி' என்ற அடைமொழி தந்து, இளையவரை சுந்தனன் என்று கூறி வலியுறுத்துகிறார்.

இந்தக் கதைச்சுருக்கத்தில் பிதிர்ந்து வீழ்ந்தவை என்ற சொற்றொடர் சிறிது ஆராயற்பாலதாக நின்றுளது. ஏதோ தானுகப் பல தடவைகளில் பிதிர்ந்து வீழ்ந்தவை எல்லாம் ஒன்றுக்கப்பட்டுத் தரப்பட்டதோ என்று ஐயம் எழுகிறது. துளஸிதாஸரோ ஐயம் திரிபு அற நான்கு கூறுக ஆக்கி அளிக்கப்பட்டது என்கிறார். இந்தக் கருத்தைத் தெளிந்துகொள்ள நமக்கு ஒரு வசதியுள்ளது.

குலமுறைகிளத்துபடத்தில் விசுவாமித்திரமுனிவர் வாயிலாக பின்வரும் பாட்டு இசைக்கப் பெற்றிருக்கிறது.

> பொன்னின்மணிப் பரிகலத்திற் புறப்பட்ட வின்னமுதைப்
> பன்னுமறைப் பொருளுணர்ந்த பெரியோன்றன் பணியினால்
> தன்னனைய நிறைகுணத்துத் தசரதனும் வரன்முறையால்
> நன்னுதலார் மூவர்க்கும் நாலுகூறிட் டளித்தான்.

எனவே துளஸிதாஸர்; கம்பநாடர் இருவருக்கும் தயரதமன்னன் இன்னமுதை நாலு கூறிட்ட கதையிலும், அதை அளித்த வரன்முறையிலிருந்த மன்னன் மனைவிமார் மூவரின் வரிசையிலும் ஒருமைப்பாடே என்பது தெளிவு. [தொடரும்]

வளருந் தமிழ்

வித்துவான் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம்அவர்கள், M. A. கொழும்பு.

(96-ம் பக்கத் தொடர்ச்சி)

பதினோராம் நூற்றாண்டு

நாதமுனி என்பார் இந் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆழ்வார்களுடைய திருப்பாடல்களை நாலாயிரப் பிரபந்தம் எனத் தொகுத்து அவற்றின் பெருமையை மக்கள் நன்கு உணருமாறு செய்தனர். இவர் நியாயதத்துவம், யோக இரகசியம் எனும் நூல்களையும் இயற்றினர். கன்னிவன புராணம், பூம்புலியூர் நாடகம் முதலியனவற்றைப் பரசமய கோளரிமாமுனி என்பார் இயற்றினர். [1] ஐந்திலக்கணங்களையும் கூறும் வீரசோழியம் எனும் நூல் புத்த மித்திரனர் என்பவரால் ஆக்கப் பட்டது. இந்நூல் தமிழ் இலக்கணத்தை வடமொழி இலக்கணத்துடன் இணைத்துவிட முயன்றது. இதற்குப் பெருந்தேவனர் ஒருரை எழுதியுளர். தண்டி அலங்காரம் எனும் அணி இலக்கண நூலும் இக் காலத்ததே. 'பரணிக்கோர் சயங்கொண்டான்'[2] எனப் போற்றப்படும் பெருமை வாய்த்த சயங்கொண்டார் இந் நூற்றாண்டின் பிற்பகுதியில் கலிங்கத்துப் பரணியைப் பாடினர். பரணிகளுள் மிகச்சிறந்ததும் முதன்முதற் றோன்றியதும் இந் நூலேயாகும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டு

தமிழ் மொழியின் வரலாற்றில் இந்த நூற்றாண்டு மிகவும் சிறந்த இடம் பெறத்தக்கது. கவியரசர்களாகிய சேக்கிழார், கம்பர், ஒட்டக் கூத்தர், புகழேந்தியார், ஔவையார், கச்சியப்ப சிவாசாரியார், பொய்யா மொழிப் புலவர் முதலியோரும் இலக்கண நூலாசிரியர்களாகிய பவணந்தியார், குணவீர பண்டிதர், நாற்கவிராச நம்பி முதலியோரும் உரையாசிரியர்களும் சைவசித்தாந்த சாத்திர நூலாசிரியர்களும் தமிழ் நாட்டை அணிபெறச் செய்தனர். தெய்வ மணங் கமழும் பெருங்காப்பியமாகிய பெரியபுராணத்தைச் சேக்கிழார் இந் நூற்றாண்டின் முற்பகுதியில்

---

[1] ஐந்திலக்கணம்:—எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

[2] வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் சயங்கொண்டான் விருத்தமெனும்
ஒண்பாவிற்கு உயர்கம்பன் கோவை உலா அந்தாதிக் கொட்டக்கூத்தன்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காளமேகம்
பண்பாய உயர்சந்தம் படிக்காச லாதொருவர் பகரொணாதே.

இயற்றினர்.[1] மூவருலா, தக்கயாகப்பரணி, ஈட்டியெழுபது, இராமாயண உத்தரகாண்டம், குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், அரும்பைத்தொள்ளாயிரம்[2] என்பன ஒட்டக்கூத்தர் இயற்றிய நூல்கள். 'வெண்பாவிற் புகழேந்தி' எனும் புனைபெயரைத் தன் ஆசிரியருக்குப் பெற்றுக்கொடுத்த நளவெண்பாவும் இக் காலத்ததே. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, அசதிக்கோவை முதலியவற்றை யாத்த ஔவையாரெனும் செந்தமிழ் மூதாட்டியாரும் இந் நூற்றாண்டில் வாழ்ந்து தமிழ் நாடெங்குஞ் சென்று நல்லறிவுச் சுடர் கொளுத்தினர். காப்பியச்சுவை நிறைந்து பொலியக் கந்தபுராணத்தைப் பாடிய கச்சியப்பசிவாசாரியாரும் தஞ்சைவாணன் கோவை யாசிரியராகிய பொய்யாமொழிப் புலவரும் இக் காலத்திலே தமிழ்ப் பணி புரிந்தார்கள். 'கல்வியிற் பெரியன் கம்பன்' எனும் பட்டம் பெற்று, கம்பர் உலக காவியங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் இராமாயணத்தை இயற்றிக் கவிச்சக்கரவர்த்தியாக விளங்கிய காலம் இந் நூற்றாண்டின் பின் பகுதியாகும். இப் பகுதியிலேயே பவணந்திமுனிவர் நன்னூலையும் குணவீரபண்டிதர் நேமிநாதத்தோடு வச்சணந்தி மாலையையும், நாற்கவிராசநம்பி அகப்பொருள் விளக்கத்தையும் இயற்றினார்கள். பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களில்[3] அனுபவ நூல்கள் எனப் போற்றப்படுவனவாகிய திருவுந்தியாரையும் திருக்களிற்றுப் படியாரையும் முறையே திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரும் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனாரும் திருவாய் மலர்ந்தருளினர். திருவரங்கத்தமுதனார் இராமானுசர்[4] நூற்றந்தாதியை

---

[1] விக்கிரம சோழன், இரண்டாங் குலோத்துங்கன், இராசராசன் எனும் மூவர் மேலும் பாடப்பட்டது.

[2] இது முத்தொள்ளாயிரம் வச்சத்தொள்ளாயிரம் எனும் நூல்களை ஞாபகப் படுத்துகிறது. இந் நூல்கள் வீரசோழியத்துக்கு முன் பத்தாம் நூற்றாண்டளவில் தோன்றியிருக்க வேண்டும்.

[3] பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்கள்:—

உந்திகளிறு உயர் போதஞ் சித்தியார்
பிந்திருபா உண்மைப் பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

இவை மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் படும்.

[4] இராமானுசரும் இந் நூற்றாண்டிலேயே வைஷ்ணவ மதத்தைப் பொலிவுற் றோங்கச் செய்தனர்.

இயற்றினர். கம்பர், ஔவையார், [1] ஒட்டக்கூத்தர், புகழேந்தியார், சத்திமுற்றப் புலவர் முதலியோர் பாடிய தனிப்பாடல்கள் பல இந் நூற்றாண்டினுக்குச் சிறப்பளிக்கின்றன. வாமனாச்சாரியார் இயற்றிய மேரு மந்தர புராணத்தையும் இந் நூற்றாண்டுக் குரிமையாக்கலாம்.

உரையாசிரியர்களுள் மிகப் பழையவரும், தொல்காப்பியத்திற்கு முதன்முதல் உரைகண்டமையால் உரை ஆசிரியர் எனும் பெயரால் வழக்கப்பட்டவருமாகிய இளம்பூரணர் இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தார். இந் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த மற்றோர் உரை ஆசிரியர் பேராசிரியராவர். இவர் திருக்கோவையார், தொல்காப்பியப் பொருளதிகாரம், குறுந்தொகை முதலியவற்றிற்கு உரை எழுதினர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டு

இந்த நூற்றாண்டிலே மெய்கண்ட சாத்திரங்கள் பல தோன்றின. சந்தான குரவர்களுள்[2] முதல்வரான மெய்கண்டதேவர் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் சிவஞானபோதம் எனும் நூலை இயற்றிச் சைவசித்தாந்த சாத்திரத்தை மக்களுக்குத் திறம்பட விளக்கினர். இவருடைய சீடராகிய சகலாகம பண்டிதர் அருணந்திசிவாசாரியார், சிவஞானசித்தியார் இருபாவிருபஃது எனும் நூல்களை அருளிச்செய்தார். மனவாசகம் கடந்தார் பாடிய உண்மை விளக்கமும் இக்காலத்ததே. சிவபெருமான் மதுரையிலே செய்த திருவிளையாடல்களைக் கூறும் பழைய திருவிளையாடல்[3] எனும் நூலைப் பெரும்பற்றப்புலியூர் நம்பி இந் நூற்றாண்டின் முற்பகுதியிலே இயற்றினர். இந்நூல் தோன்றிய காலத்திலேயே முனைப்பாடியார் செய்த அறநெறிச்சாரமும் தோன்றிற்று.

திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் சிறந்தவரெனப் போற்றப்படும் பரிமேலழகரும்[4], தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு விசேட

---

1 காசுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி
ஆசுக்குக் காளமுகி லாவானே—தேசுபெறும்
ஊழுக்குக் கூத்தன் உவக்கப் புகழேந்தி
கூழுக்கிங்கு ஔவையெனக் கூறு.

2 சந்தான குரவர்கள் நால்வர்:—1 மெய்கண்டதேவர். 2 அருணந்தி சிவாசாரியார். 3 மறைஞானசம்பந்தசிவாசாரியார். 4 உமாபதிசிவாசாரியார்.

3 இது வேம்பத்தூரார் திருவிளையாடல் எனவும்படும்.

4 பரிமேலழகர் பரிபாடலுக்கும் உரை எழுதியுள்ளர்.

உரை எழுதிய சேனாவரையரும் இக் காலத்திலே தமிழ் நாட்டை அலங்கரித்தனர். இவர்களிருவரும் தம் உரைகளிலே தம்முடைய வடமொழி அறிவை அளவின்றிக் காட்டியுள்ளார். முத்தமிழ்ப் பாடலாகிய சிலப்பதிகாரத்துக்குச் சிறந்த உரை வகுத்த அடியார்க்கு நல்லாரும் இந் நூற்றாண்டினரே. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் சோழப் பேரரசு சீர்குலைந்தது. சோழருக் கடிமைப்பட்டு மங்கிக் கிடந்த பாண்டியர்கள் இந்தக் காலந் தொடங்கி ஏறக்குறைய நூறு வருடங்கள்வரை சிறப்புற்றோங்கினர்.

பதினான்காம் நூற்றாண்டு

சித்தாந்த[1] அஷ்டகம் எனப்படும் சைவசித்தாந்த சாத்திரங்கள் எட்டினை இயற்றிய உமாபதி சிவாசாரியார் இந் நூற்றாண்டுத் தொடக்கத்திலே வாழ்ந்தார். இவர் திருத்தொண்டர் புராணசாரம்,[2] சேக்கிழார் புராணம், கோயிற் புராணம், முதலிய நூல்களையும் பாடியுள்ளார். பவுட்கரம் எனும் உபாகமத்திற்கும் இவர் வடமொழியிலே ஒரு விரிவுரை இயற்றியுள்ளார். இந்த நூற்றாண்டுத் தொடக்கத்திலே நச்சினார்க்கினியர் வாழ்ந்திருக்க வேண்டும். இவர் தமிழ் உரையாசிரியர்களுள் மிகச்சிறந்தவர். தொல்காப்பியம், சிந்தாமணி, பத்துப்பாட்டு, கலித்தொகை முதலிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

இந் நூற்றாண்டின் பிற்பகுதியிலே பாண்டியர் வலிகுன்றி ஒடுங்கத் தமிழ்நாடு அரை நூற்றாண்டாக முகமதியர் ஆதிக்கத்துக்குட்பட்டது. இம் முகம்மதியர்களாலும், பின்னர் வந்த அன்னியர்களாலும், அடுத்த நான்கு நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் நடந்த பெரும் போர்களாலும் தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் ஏற்பட்ட இடையூறுகளை ஒருவாறு நீக்கி, நமது மொழியினையும்

---

[1] சித்தாந்த அஷ்டகம்:—1 சிவப்பிரகாசம் 2 திருவருட்பயன் 3 வினா வெண்பா 4 போற்றிப்பஃறொடை 5 கொடிக்கவி 6 நெஞ்சு விடு தூது 7 உண்மைநெறி விளக்கம் 8 சங்கற்பநிராகரணம். உண்மைநெறி விளக்கத்தை இவர் செய்யவில்லை யென்றும், பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களுள் இதற்குப் பதிலாகச் சீகாழிச் சிற்றம்பல நாடிகள் செய்த துகளறு போதம் சேர்க்கப்பட வேண்டும் என்றுங் கூறுவாருமுளர்.

[2] இந் நூலையும் இவர் செய்யவில்லை என்பர் சிலர்.

சமயத்தையும் வளம்படுத்திய [1]சைவப் பெருமடங்கள் இந் நூற் றாண்டின் இறுதியிலே சிறந்து விளங்கின.

நாலாயிரப் பிரபந்தத்திற்கு உரை வகுத்த வைணவ ஆசிரியன் மார்களுடன் நஞ்சீயர், நம்பிள்ளை என்போர் இந் நூற்றாண்டில் வாழ்ந்தனர். இவர்களும் இவர்களுக்குப் பின் வந்த வைணவ உரை யாசிரியர்களும்[2] மணிப்பிரவாள நடையிலே உரைகளை எழுதினர்.

இந்த நூற்றாண்டின் இறுதியில் காங்கேயன் என்பான் உரிச் சொல் நிகண்டையும், தொல்காப்பியத்தேவர் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தையும் இயற்றினார்கள். உவமான சங்கிரகமும் இக் காலப் பகுதியிலேயே தோன்றிற்று. முதுசூரியர், இளஞ்சூரியர் எனும் பெயர்களையுடைய இரட்டையர்கள்[3] இந் நூற்நூற்றாண்டில் வாழ்ந்து தில்லைக் கலம்பகம், ஏகாம்பரநாதருலா, கச்சிக்கலம்பகம் முதலிய சிறந்த பிரபந்தங்களையும் பல தனிச் செய்யுள்களையும் பாடியுளர். அவிரோதநாதர் என்பார் அருகக் கடவுள் மீது நூற்றந் தாதியினையும், பொன்னவன் என்பார் கண நூல் ஒன்றினையும், உதீசித் தேவர் திருநூற்றந்தாதியையும் பாடினர்.

போலிப் புலவர்களின் செருக்கை அடக்கியும்[4] பாரதத்தைத் தமிழிலே விருத்தப்பாவாற் பாடியும், புகழ் ஈட்டிய வில்லிபுத்தூ

---

[1] பிற்காலத்திலே பதினெண் மடங்கள் சைவத்தை வளர்த்தன என் பர். இவற்றுள் திருவாவடுதுறை, காஞ்சீபுரம், தருமபுரம், சூரியனார் கோயில், திருஞானசம்பந்தராதீனம், திருவண்ணாமலையாதீனம், திருப்பனந் தாள் முதலியன குறிப்பிடத் தக்கன.

[2] மணியும், பவளமும் கலந்ததுபோல் தமிழினையும் வடமொழியினையும் சமமாகக் கலந்தெழுதும் நடை.

[3] இவர்களுள் ஒருவர் முடவர். மற்றொருவர் குருடர். முடவரைக் குருடர் சுமந்து செல்வது வழக்கம் என்பர். முதலரையை முடவரும் மற்ற தைக் குருடருமாகப் பாடிய செய்யுள்கள் பலவுள.

[4] குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டிய னிங்கில்லை, குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி எட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை, இரண் டொன்று மரைமுடிக் கிறங்கப் போட்டுவெட்டுதற்குக் கவிஒட்டக் கூத்த னில்லை, விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித் தெட்டுதற்கோ தமி ழறியாத் துரைகளுண்டு தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே.

ராழ்வார் இந் நூற்றாண்டிறுதியிலும் அடுத்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தார்; தத்துவராயர் எனும் புலவர் அஞ்ஞவதைப்பரணி, மோகவதைப் பரணி, பாடுதுறை, சசிவன்னபோதம் முதலிய பல நூல்களை இயற்றினார்.

பதினைந்தாம் நூற்றாண்டு

இந் நூற்றாண்டின் முற்பகுதியினை அணியுறச் செய்தவர் தாள சமுத்திரமாக விளங்கும் திருப்புகழைப் பாடி 'வாக்கிற்கு அருணகிரி' எனும் சிறப்புப் பெயர் பெற்ற அருணகிரியார் ஆவார். இவர் கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, வேல் விருத்தம், உடற்கூற்று வண்ணம் முதலிய நூல்களையும் பாடியுளர். பெரியவாச்சான் பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, வேதாந்த தேசிகர், பிள்ளை லோகாசாரியர், அழகிய மணவாளப் பெருமாள் நயினார் முதலிய வைணவ உரையாசிரியர்களும் இந் நூற்றாண்டில் வாழ்ந்து நாலாயிரப் பிரபந்தத்திற்கு உரை எழுதியும், வைணவ சமய நூல்களை எழுதியும் சமயத்தொண்டு செய்து புகழடைந்தனர்,

'வசை பாடக் காளமேகம்' எனவும் 'ஆசுக்குக் காளமுகில்' எனவும் புகழுரை பெற்ற காளமேகப் புலவர் இந் நூற்றாண்டின் பிற்பகுதியிலே[1] தமிழினை வளம்பெறச் செய்தார். இவருடைய ஆக்கவித்திறனைப் பல புலவர்கள் பாராட்டினர். இத்திறனை இவரே தமது பாடல் ஒன்றில் அழகாகப் புலப்படுத்தினர் என்பர்[2]. இவர் தனிப்பாடல்கள் பலவற்றுடன் திருவானைக்கா வுலா, பரப்பிரம விளக்கம் முதலிய பல நூல்களையும் செய்துளர்.

---

[1] இவரை இரட்டையர் காலத்தவராகக் கொள்வர் சிலர். இதற்குச் சாசனச் சான்று இடங்கொடாது.

[2] அரைத்து நாழிகையில் ஆறுநா ழிகை தனிற் சொற்சந்த மாலை சொல்லத்
துகளிலா அந்தாதி எழுநாழிகைதனில் தொகைபெற விரித்துரைக்கப்
பாதஞ்செய் மடல் கோவை பத்துநாழிகை பரணியொருநாள் முழுதுமே
பாரகாவியமொல மோரிரு தினத்திலே பகரக் கொடி கட்டினேன் ......

பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதி[1]

சிதம்பர புராணம் மதுரைச் சொக்கநாதருலா, எனுமிரு நூல்களைப்பாடிய புராணத் திருமலைநாதரும் இவருடைய மகன் பரஞ்சோதியாரும் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தனர். சிதம்பரப் பாட்டியலை யாத்த இப் பரஞ்சோதியாரும், இந் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே வாழ்ந்து திருவிளையாடற் புராணம்,[2] மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களை இயற்றிய பரஞ்சோதி முனிவரும் வெவ்வேறானவர்கள்; பாகவத புராணத்தைப்[3] பாடிய செவ்வைச் சூடுவாரும், தத்துவப் பிரகாசத்தைச் செய்த தத்துவப் பிரகாசரும், இரு சமய விளக்கத்தை இயற்றிய அரிதாஸரும் இந் நூற்றாண்டினரே. மண்டல புருடர், சூடாமணி நிகண்டை இயற்றியதும் வீரகவிராசர் அரிச்சந்திர புராணத்தை அரங்கேற்றியதும், அருளாளதாசர் புராண பாகவதம்[5] பாடியதும் திருக்குருகைப் பெருமாள் கவிராயர், குருகா மான்யத்தையும், மாறனகப் பொருள், மாறனலங்காரம், திருப்பதிக்கோவை, நம்பெருமாள் மும்மணிக் கோவை, மாறன் பாப்பாவினம், மாறன் கிளவி மணிமாலை முதலிய நூல்களைச் செய்ததும் இக் காலமே. இந் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே வைணவ மதத்தலைவர்களுட் சிறந்தவரான மணவாள மாமுனிவர் திருவாய்மொழி நூற்றந்தாதி உபதேச ரத்தின மாலை, கீதா தாற்பரிய தீபம் முதலிய நூல்களை இயற்றினர்.

---

[1] இந் நூற்றாண்டு தொடக்கம் ஒவ்வொரு நூற்றாண்டும் முற்பகுதி பிற்பகுதி என இரண்டாகப் பிரிக்கப்படும். முற்பகுதியில் முதல் ஐம்பது ஆண்டுகளும் பிற்பகுதியில் அடுத்த ஐம்பது ஆண்டுகளும் அடங்கும்.

[2] வடமொழிக் காந்தத்தின் சங்கர சங்கிதையில் கூறப்படும் திருவாலவாய் மான்மியத்தின் மொழிபெயர்ப்பு.

[3] பாகவதம் ஏழுவகைப்படும். அவையாவன:—1 இதிகாச பாகவதம் 2 புராண பாகவதம் 3 சம்மிதா பாகவதம் 4 உபசம்மிதா பாகவதம் 5 விஷ்ணு ரகசிய பாகவதம் 6 விஷ்ணுயாமளா பாகவதம் 7 கௌதம சம்மிதா பாகவதம். இப் பாகவதம் வடமொழியில் வியாசரியற்றிய இதிகாச பாகவதத்தின் மொழிபெயர்ப்பு.

[4] இது விண்டு பாகவதம் எனவும் படும்.

(தொடரும்)

மதிப்புரை

1. திருவாசகப் பேருரை—சிவ புராணம் (பார்வைப் பிரதி):—[ஆசிரியர்: பண்டிதமணி திரு. க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள். விலை ரூ. 12. முன் பணமாக அனுப்புவோருக்கு மட்டும். முழுதும் அச்சானவுடன் புத்தகம் அனுப்பப் பெறும். விலாசம்: ஷை ஆசிரியர், மாவிட்டபுரம், தெல்லிப்பழை; 150, New Chetty Street, Colombo.]

ஆசிரியரவர்கள் தம் அறிவுக் கருவூலத்தில் பன்னெடு நாட்கள் பரிந்து தேடித் தொகுத்துவைத்த அரும்பொருளாகும் இது. இதற்கு முன்னரே பல திருவாசக உரைகள் தோன்றி யிருப்பினும், இதனை ஒருகால் பயின்றார்க்கும் இதன் இன்றியமையாமை நன்கு தெளியப்படும். ஆகையால் இந் நன் முயற்சிக்கு அன்பளிப்பாகப் பொருட்கொடை புரிதல் முதலிய எல்லா வகைகளிலும் ஆக்கமளிப்பது, தமிழ் மக்களின் தவிர்த்தலரிய கடமை என்பது சொல்லாமலே அமைந்தது.

இனி, பார்வைப் பிரதியாக வந்துள்ள இச் சிவபுராண வுரை இலக்கண இலக்கிய சமயநெறிகளின் மரபுநிலை திரியாத மாண்புடன், மிகச் செவ்விய முறையில் இயற்றப்பெற்று விளங்குகிறது. தொட்டதொட்ட இடந்தோறும் அரும்பெறல் நிதியை அள்ளிக் குவித்தாற் போன்றபதஸாரங்கள் தெள்ளியோர் உள்ளம் கொள்ளைகொள்ளும் திறத்தவாய் மிளிர்கின்றன. இவ் அரிய முயற்சி இடையூறின்றி இனிது நிறைவேற எல்லாம்வல்ல இறைவன் திருவருள் மலர வேண்டும்.

---

2. துகளறுபோதம் உரையுடன்:—[உரையாசிரியர்: திக்கம் செல்லையா என வழங்கும், அச்சுவேலியூர் ஈசான சிவன் அவர்கள். விலை அணா 14. விலாசம்: திரு. செல்லம் இரத்தினம் பிள்ளை அவர்கள், திக்கம், வல்வெட்டித்துறை, கொழும்பு.]

சைவசித்தாந்த முறைப்படி, மெய்ஞ்ஞானமாகிய சிவஞானத்தை வகுத்துக் கூறும் துகளறுபோதம் என்னும் நூல் சீகாழிச்சிற்றம்பல நாடிகள் திருவாய் மலர்ந்தது. மாதவச் சிவஞான யோகிகளால் பிரமாணநூலாக மதிக்கப் பெற்றது. ஈசான சிவன் என்னும் தீக்ஷா நாமமுடைய பெரியார் இயற்றியுதவிய இவ் வுரை, பழந்தமிழ் நூலுரைகள் போல மிகத்தூய்மையும் தெளிவும் இனிமையும் வாய்ந்தது. தடை விடை உள்ளுறுத்துத் தருக்க ரீதியில் மெய்ப்பொருளை விளக்கும் இது, சிவஞானச்செல்வர் எல்லோரும் வாசிக்க இன்றியமையாதது. இதன் விலைப்பொருள் தேவாலயத் திருப்பணியாகிய சிவபுண்ணியத்திற் செலவாகுமென்று தெரிகிறது. இதன் பதிப்பாளர் திரு. இரத்தினம் பிள்ளையவர்களின் பரோபகாரம் பாராட்டற்பாலது.

3. இராமகதை:—[ஆசிரியர்: அ. சே. சுந்தரராசன் அவர்கள், B. A, விலை ரூ. 1. விலாசம்: ஷை ஆசிரியர், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம், இலங்கை]

கம்பர் அருளிய இராமாவதாரத்தின் கதைச் சுருக்கமாக எழுதப்பெற்ற இது, அக் கவியரசரின் காவியச் சுவையை முழுதும் நுகருமாறு இளமாணவர்க்கு மிகவும் கவர்ச்சியூட்ட வல்லது. தேர்ந்தெடுத்த செஞ்சொற்களால் இயன்று, எளிமையோடு இனிமை கலந்த இதன் வசன நடை பள்ளிக்கூடங்களிற் பிள்ளைகள் பயில்வதற்கு மிகுதியும் தகுதிவாய்ந்து விளங்குகிறது.

---

4. ஒருபா வொருபது:—[ஆசிரியர்: யாழ்ப்பாணம், தென்கோவை திரு. ச. கந்தயபிள்ளையவர்கள். விலை: சதம் 25. விலாசம்: தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம், யாழ்ப்பாணம். அல்லது, திரு. ரா. நாகரத்தினம் பிள்ளை அவர்கள், அம்பலத்தாடையார் மடத்து வீதி, புதுச்சேரி.]

இது புதுச்சேரி ஸ்ரீமணக்குள விநாயகப்பெருமான் மீது பத்து அகவற் பாக்களால் அமைந்த ஒரு பிரபந்தம். அரும்பொருள் பொதிந்து திருந்திய செய்யுள் திறமையோடு இயற்றப்பெற்ற இது, ஆசிரியரின் தமிழ்நூற் புலமையோடு சமய நூலாற்றலையும் நன்கு புலப்படுத்துகின்றது.

---

5. அடியார்க்கு நல்லார் வரலாற் றாராய்ச்சி:—[ஆசிரியர்: திரு. பெ. செகந்நாதன் அவர்கள், விலை: ரூபா 2–50. விலாசம்: ஷை ஆசிரியர், சரசுவதி உயர்நிலைப்பள்ளி, வேலணை, யாழ்ப்பாணம்.]

அடியார்க்கு நல்லார், பதினாலாம் நூற்றாண்டில் ஈழநாட்டுச் சிங்கள அரசன் குணபூஷணன் அமைச்சராய், அவன் படைத்தலைவனை பொப்பண்ண காங்கேயன் ஆதரவு பெற்று, அந்நாட்டிலிருந்தே சிலப்பதிகாரவுரையை இயற்றினார் என்பது இவ் வாராய்ச்சியாளர் துணிபு. இதற்குப் பல சான்றுகளும் காட்டி 180 பக்க அளவில் மிகவிரிவாக அவர்கள் இதனை எழுதி முடித்துள்ளார்கள். இம் முடிபு புதுமையே யாயினும், தக்க பிற சான்றுகளோடு மாறுகொள்ளாத வரையில் உறுதியுடையதென்பதில் இழுக்கில்லை என்னலாம். இந் நிலையில் இவ் வாசிரியரின் அறிவும் ஆற்றலும் ஊக்கமும் உழைப்பும் பாராட்டற்குரியன என்னும் முறைமை பற்றி இதற்குப் புலவர் பலரும் மதிப்புரை வழங்கி யுள்ளார்கள்.